செ.வெ.எண்: 764　　　　நாள்: 24.11.2007

<u>பத்திரிக்கை செய்தி</u>

## திறக்கப்பட்ட டன்லப் தொழிற்சாலையில்

## முன்கூட்டி ஒய்வு பெற்ற 180 தொழிலாளர்களுக்கு ரூ. 4 கோடி உதவித் தொகை

<u>அமைச்சர் தா. மோ. அன்பரசன் வழங்கினார்</u>

சென்னை, நவம்பர் 25 :– கடந்த மாதம் திறக்கப்பட்ட டன்லப் தொழிற்சாலையில் முன்கூட்டியே ஒய்வு பெற்ற 180 தொழிலாளர்களுக்கு ரூ. 4 கோடியே 15 லட்சம் உதவித் தொகையை தமிழக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன் வழங்கினார்.

அம்பத்தூரில் உள்ள மோட்டார் வாகன டயர்கள் தயாரிக்கும் டன்லப் தொழிற்சாலை கடந்த 1998–ஆம் ஆண்டு நலிவுற்ற காரணத்தால் மூடப்பட்டது.

மூடப்பட்ட இந்த தொழிற்சாலையை திறக்க கோரி 'டன்லப் பேக்டரி எம்ப்ளாயீஸ் யூனியன்' தொழிற்சங்கத் தலைவரும், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள் கடந்த 8 ஆண்டுகளாக இத்தொழிற்சாலை தொழிலாளர்களுடன் இணைந்து போராடி வந்தார்.

கடந்த **2006**–ஆம் ஆண்டு முதல்வர் தலைவர் கலைஞர் தலைமையில் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இத்தொழிற்சாலையை திறக்க வேண்டும் என்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு தா. மோ. அன்பரசன் அவர்களிடம் இந்த ஆலையின் தொழிற்சங்கத் தலைவர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, M.P. அவர்கள் தலைமையில் தொழிலாளர்கள் கோரிக்கை மனுவினை அளித்தனர்.

இக்கோரிக்கையை ஏற்று தொழிலாளர் நலத் துறை ஆணையர் திரு. ஆ. சுகுமாரன், இ.ஆ.ப அவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்த அமைச்சர் உத்தரவிட்டார். தொடர்ந்து நடைபெற்ற பேச்சுவார்த்தையில் கடந்த **23–10–2007** அன்று இரு தரப்புக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது.

ஒப்பந்தத்தின்படி **24–10–2007** அன்று பராமரிப்பு பணிகள் துவங்கப்பட்டு ஆலை இயங்கத் தொடங்கியது.

டன்லப் ஆலையின் தொழிலாளர்களுக்கு முன்கூட்டியே ஒய்வு பெறும் திட்டத்தின்படி (Voluntary Retirement Scheme) **180 தொழிலாளர்களுக்கு ரூ. 4 கோடியே 15 லட்சம் தொகையை** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், தொழிற்சங்கத் தலைவர் திரு. ஆ. கிருஷ்ணசாமி M.P. அவர்கள் முன்னிலையில் இன்று **24–11–2007** வழங்கப்பட்டது.

---

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

2/2